

# மறைக்கப்பட்ட இரகசியம்

யுத்தத்திற்குப் பிற்பட்ட மாவட்டங்களில் முஸ்லிம் பெண்கள் முகங்கொடுத்த பாலியல் இலஞ்சம்

- சுருக்கவுரைப் பத்திரம் -

Centre for Equality and Justice

©சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம், இலங்கை
அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை

வடிவமைப்பு: ஜேமி அல்போன்ஸஸ்
புகைப்படங்கள்: ஷார்னி ஜயவர்தன
படமூல: google.com

அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது ஆகஸ்ட் 2017
ஓபன் சொஷைட்டி பௌன்டேஷனினால் (Open Society Foundations) இந்த செயற்றிட்டத்திற்கு நிதியளிக்கப்பட்டுள்ளது.

பிரசுரத்தில் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் நேர்காணப்பட்ட நபர்களின் கருத்துக்களாகும். இவை சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தின் கொள்கைகளையோ கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. இந்த பிரசுரத்தின் எந்த பகுதிவும் ஆதாரமின்றி மீள்பிரதி செய்யப்படவோ, மீட்டெடுப்பு முறைமையில் சேமிக்கப்படவோ அல்லது இலத்திரனியல், இயந்திரமுறை, ஒளிப்பதிவு நகலாயுதம் என எந்த வடிவத்தின் மூலம் பரிமாற்றம் செய்யப்படவோ முடியாது.

*மேலும் தகவலுக்கு தொடர்பு கொள்ளவும்:*
சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம்
325 ஏ1, திம்பிரிகஸ்யாய வீதி கொழும்பு 05. இலங்கை.
தொலைபேசி/ தொலைநகல்: 94 11 2055404

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| அறிமுகம் | 2 |
| பாலியல் இலஞ்சத்தின் சட்ட மற்றும் அரசியலமைப்புசார் விளைவுகள் | 3 |
| முறையியல் | 5 |
| நேர்காணப்பட்டவர்களைக் கருத்தமைவாக்கல் | 8 |
| முடிவுகளின் பகுப்பாய்வு | 10 |
| குற்றமிழைத்தவர்கள்/குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் | 13 |
| பாலியற் சுரண்டல் மற்றும் இலஞ்சத்திற்கு வழிவகுத்த சூழ்நிலைகள் | 13 |
| பாலியற் சுரண்டல் மற்றும் இலஞ்சத்தின் வகைகள் | 14 |
| நிவாரணம் அல்லது இழப்பீட்டை நாடுவதற்குப் பெண்கள் தவறுவது ஏன்? | 15 |
| பரிந்துரைகள் | 16 |


* பாலியல் இலஞ்சத்திற்கு உள்ளான போரினால் பாதிக்கப்பட்ட சிங்களம், தமிழ் மற்றும் முஸ்லீம் பெண்களின் தொடர் ஆய்வுகளில் இது இரண்டாவது ஆய்வறிக்கை ஆகும்.



# அறிமுகம்

பிரதானமாகக் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறையிலும் (கிழக்கு மாகாணம்), புத்தளத்திலும் (வடமேல் மாகாணம்) மற்றும் பொலன்னறுவையிலும் (வட மத்திய மாகாணம்) வசிக்கும் முஸ்லிம் பெண்கள் மீதான பாலியற் சுரண்டல் மற்றும் பாலியல் குறித்து இக்கற்கை கவனம் செலுத்துகின்றது. வடக்கில் யுத்தத்தினாற் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பெண்கள் (பொகுஸ் விமென் 2016) மற்றும் தெற்கில் இராணுவக் கணவரை இழந்த பெண்கள் (பொகுஸ் விமென் 2017) ஆகியோர் மத்தியில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வின் தொடர்ச்சியாகவே இக்கற்கை அமைகின்றது.

வடக்கு மற்றும் கிழக்கினைச் சேர்ந்த பெரும்பாலான முஸ்லிம் சமூகத்தினர் படுகொலைகள் மற்றும் வெளியேற்றல், நீண்ட கால இடப்பெயர்வு, 'காணாமற் போதல்கள், கடத்தல்கள் மற்றும் வாழ்வாதார, நில இழப்பு' போன்றவற்றை எதிர்கொண்டுள்ளனர் என்பதனைக் கவனத்தில் கொள்வது மிகவும் முக்கியமாகும். இக்கற்கையில் பங்கேற்ற முஸ்லிம் பெண்களில் சிலர் யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்தவர்களாக இருக்கின்றனர். ஒருவர் யுத்தத்தின்போது தமது முதலாவது கணவரை இழந்துள்ளார்.

இக்கற்கையானது பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் தொடர்பிற் கவனம் செலுத்தாத போதிலும், நேர்காணப்பட்ட பத்துப் பெண்களில் ஏழு பேர், தனியாக இருப்பதுடன், பிரதான வருமானம் ஈட்டுபவர்களாகக் குடும்பத்திற்குத் தலைமை வகிக்கின்றனர். எவ்வாறாயினும், தம்மைக் 'குடும்பத் தலைவர்கள்' என அடையாளப்படுத்துவதற்கு அவர்கள் மறுத்து விட்டனர். அது கலாசார விழுமியங்களின் காரணமாகவும் இருக்கலாம். வயதில் மூத்த குடும்பத்தினர் - தாய், மாமி அல்லது ஆண் உறவினரைக் - குடும்பத்தின் தலைவராக அடையாளப்படுத்த விரும்பினார்கள்.

குடும்பத்தில் ஆண்கள் இன்மையின் காரணமாகப் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் குறிப்பாகப் பாலியற் தொந்தரவு, பாலியற் சுரண்டல் மற்றும் பாலியல் இலஞ்சம் என்பவற்றிற்கு இலகுவில் பாதிக்கப்படக் கூடியவர்களாக உள்ளமையைப் பல தசாப்தங்களாக முன்னெடுக்கப்பட்ட விரிவான ஆராய்ச்சி தெளிவாகக் காட்டுகின்றது. அரச பிரதிநிதிகளின் ஆதரவு மற்றும் அத்தியாவசிய சேவைகள் அத்தியாவசியமான அரச பிரதிநிதிகளின் ஒத்துழைப்பில் அடிக்கடி தங்கியிருப்பதாக அவர்களுடைய பொருளாதார வாழ்வு மற்றும் சமூக-அரசியல் அந்தஸ்து உள்ளது. இது மறுபுறத்தில் அவர்களது இலகுவில் பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய தன்மையையும் அதிகரிக்கின்றது.

பாலியற் சுரண்டல் என்பதற்கான ஐக்கிய நாடுகளின் வரைவிலக்கணமானது "ஏனையோரினால் பாலியற் சுரண்டலுக்கு உள்ளாக்கப்படல் என்பது முதல், நிதிசார், சமூகம்சார் அல்லது அரசியல்சார் பயனுக்காக மாத்திரமல்லாது, பாலியல் நோக்கங்களுக்காகப் பாதிக்கப்படும் தன்மை, மாறுபாடான அதிகாரம், அல்லது நம்பிக்கையை மீறல் அல்லது மீற முயற்சித்தல்" எனக் குறிப்பிடுகின்றது. சன்மானங்கள் மற்றும் உதவிகள் அல்லது எந்தவொரு வகையான சேவைகளையும் வழங்குவதற்குப் பதிலாகப் பாலியல் நடத்தையினை முயற்சிக்கும் பாலியற் சுரண்டலின் ஒரு குறிப்பிடத்தக்க வடிவமாகப் பாலியல் இலஞ்சம் உள்ளது.

வடக்கில் உள்ள தமிழ்ப் பெண்கள் மற்றும் தெற்கில் உள்ள சிங்களப் பெண்களைப் போன்றே, கிழக்கில் உள்ள முஸ்லிம் பெண்களும், அரசாங்கத் தொழிலுக்கு விண்ணப்பிக்க முயற்சித்தபோது, பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகளைச் சமர்ப்பிப்பதற்கு அல்லது பதிவுகளைப் பெறுவதற்கு முயற்சித்தனர். உதவித் தொகைக்கு விண்ணப்பிப்பதற்காக மாவட்டச்

செயலகத்திற்குச் சென்றவேளை, ஆவணங்களைச் சான்றுப்படுத்துவதற்காகக் கிராம சேவகரை அணுகியபோது, நன்னடத்தை அதிகாரியுடன் தொடர்பு கொண்டபோது மற்றும் உள்ளூர்ப் பாடசாலை ஒன்றினை மேம்படுத்துவதற்கு மாகாணசபை உறுப்பினரிடம் விண்ணப்பித்த சந்தர்ப்பங்களில் பாலியல் இலஞ்சம் மற்றும் பாலியற் சுரண்டலின் பல்வேறு வடிவங்களையும், தொடர்ச்சியான பாலியற் பலாத்காரத்தையும் எதிர்கொண்டதாகப் பெண்கள் முறைப்பாடு செய்தனர்.

சிங்கள மற்றும் தமிழ்ப் பெண்களைப் போலன்றி, ஆடை அணிவது மற்றும் நடத்தையில் அடக்கம் மிக்கவர்களாகவும், கிடைக்கக் கூடிய வளங்கள் பற்றிய விழிப்புணர்வு பற்றாக்குறை மற்றும் குடும்பங்களில் ஆணாதிக்கம் என்பவற்றினால் முஸ்லிம் பெண்கள் அரசாங்க உதவிகளை நாடுவது அரிதாக உள்ளன எனவும். இதனால் முஸ்லிம் பெண்களிற்குப் பாலியல் இலஞ்சம் தொடர்பான ஆபத்துக் குறைவாகவே உள்ளது என மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் போன்ற அரசாங்க அதிகாரிகளினாலும், முஸ்லிம் சமுதாயப் பணியாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் போன்றோர் கொண்டிருந்த பொதுவான கருதுகோளைப் பொய்ப்பிப்பதாக இக்கற்கையின் முடிவுகள் அமைந்திருந்தன.

**இலங்கையிற் பாலியல் இலஞ்சத்தை அடையாளப்படுத்துவதற்கான தற்போதைய சட்ட மற்றும் அரசியலமைப்பு வரைபுநகல்கள் பற்றிய மேற்பார்வை ஒன்றினை இவ்விளக்க ஆவணம் வழங்குகின்றது. ஆய்வுக் கற்கைக்குப் பயன்படுத்தப்பட்ட முறையியலையும் இது விளக்குகின்றது. பத்துச் சம்பவக் கற்கைகளில் கலந்து கொண்ட பெண்களினைக் கருத்தாக்கம் செய்வதோடு, பத்துச் சம்பவக் கற்கைகளில் இருந்தும் பெறப்பட்ட பிரதான கருத்துக்களின் சாரம்சத்தினையும், பல்வேறு பரிந்துரைகளையும் வழங்குவதன் மூலம் நிறைவு செய்கின்றது.**

# பாலியல் இலஞ்சத்தின் சட்ட மற்றும் அரசியலமைப்புசார் விளைவுகள்

- பொது அதிகாரிகள் இலஞ்சம் வாங்குவது இலங்கைச் சட்ட மீறலாகும். துரதிஷ்டவசமாகத், தனியார் நிறுவனங்கள், அமைப்புக்கள் மற்றும் நபர்கள் ஆகியோர் இச்சட்டங்களுக்குள் உள்வாங்கப்படுவதில்லை. அதனால், அவர்கள் இலஞ்சச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட முடியாதவர்கள் ஆகின்றனர். ஏனைய பிரயோகிக்கக் கூடிய சட்டத்தின் கீழ் தனியார் நிறுவனங்கள் மற்றும் ஏனைய நபர்கள் உள்ளடங்குகின்றனர்.
- இலஞ்சச் சட்டத்தில் பாலியல் இலஞ்சம் என்பது விசேடமாகக் குறிப்பிடப்படாதபோதிலும், விளக்கம் "எதுவாயினும் எந்தவொரு விருப்பு அல்லது அனுகூலம் உள்ளடங்கலாக" "மன நிறைவுக்காக வழங்குதல்" என்பதன் வரைவிலக்கணம் பாலியல் விருப்புக்களை உள்ளடக்கியதாக

> 'நான் இஸ்லாமிற்கு மதம் மாறியவர் என்பதால், முஸ்லீம் சமூகத்தைச் சேர்ந்த எவரும் ஆதரவளிக்கமாட்டார்கள் என அவர் கூறினார், அவருடன் வாழ்வது குறித்துக் கவனம் செலுத்துமாறும் கூறினார்.'



விளக்கப்பட முடியும். "மனநிறைவுக்கு வழங்குதல்" என்ற பதமானது பணம்சார்ந்த மனநிறைவுக்காக வழங்கல் அல்லது பணத்தினால் மதிப்பிடக் கூடிய மனநிறைவுக்காக வழங்குதலுக்கு மட்டுப்படுத்தப்பட்டது அல்ல என இலங்கைக் குற்றவியற் கோவை வலியுறுத்துகின்றது. எனவே, பாலியல் இலஞ்சம் இதில் உள்ளடங்கியிருப்பதாகவும் அதனை உரைவிளக்க முடியும்.

- பால்சார்ந்த எந்தவொரு வன்முறையும் அடிப்படை உரிமைகள் மீறலாகும் என்பதால், இலங்கை அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்திற்குள் இலஞ்சத்தின் பாலியல்சார் வடிவங்கள் உள்ளடங்குகின்றன.
- அரசின் நிறைவேற்று அல்லது நிர்வாகக் கிளையைச் சேர்ந்தவர்களின் அத்தகைய நடவடிக்கை ஒன்றினை முன்னெடுக்கும் தரப்புத் தொடர்பில் நிபந்தனை சார்ந்ததாகும். தனியார் நிறுவனங்கள், அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் இங்கு குறிப்பிடப்படவில்லை.

'இரண்டு வருடங்கள் கடந்து விட்டன. இந்நிகழ்வால் நான் இன்றும் துன்புறுகின்றேன். ஒட்டுமொத்தக் கதையையும் சொல்ல முடியாதுள்ளது. உங்களிடம் அனைத்து விடயங்களையும் நான் பகிரவில்லை.'

# முறையியல்

- முஸ்லிம் பெண்களுக்கான பாதுகாப்பின்மை அதிகரித்திருந்த காலப்பகுதி ஒன்றிலேயே இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டது. மிக முக்கியமாக, முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் (MMDA) திருத்தத்திற்காகக் குரல் கொடுத்து வந்த செயற்பாட்டாளர்களை நிறுத்த வேண்டும் எனக் கோரி, முஸ்லிம் மதத் தலைவர்கள் செயற்பாட்டாளர்களை நெருக்கமாகக் கண்காணித்துவந்த காலப்பகுதியில் இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டது. இதன் காரணமாகப் பாலியல் இலஞ்சத்தை அனுபவித்த பலர் ஆய்வாளர்களை அணுகுவதற்கு அஞ்சினர்.

- எனவே, இலங்கையின் கிழக்கு, வடமேல் மற்றும் வட மத்திய மாகாணங்கள் என்ற மூன்று மாகாணங்களுக்கும் இவ்வாய்வுக் கற்கையை வரையறுக்க நேர்ந்தது. இது பாலியல் இலஞ்சத்தை அனுபவித்திருக்கக் கூடிய பெரும்பாலான முஸ்லிம் பெண்களின் ஒரு பகுதியாகும்.

- பாலியல் இலஞ்சம் கோரிய பொலிசாரிற்கு எதிராக முறைப்பாடு செய்த இரண்டு முஸ்லிம் பெண்கள் குறித்து எமக்குத் தெரிவிக்கப்பட்டது. பெண் ஒருவர் நீதிமன்றம் வரைக்கும் சென்றிருந்தபோதிலும், அவரைக் கண்டறிய முடியாதமையினால் அவரை நேர்காண முடியவில்லை. இன்னொரு பெண் குற்றம் சுமத்திய நபர்களிடமிருந்தான தொந்தரவுகளைத் தவிர்ப்பதற்காகவும், அயலவர்களிடமிருந்து ஒதுங்குவதற்காகவும் மாவட்டத்தை விட்டே வெளியேற நேர்ந்தது.

- நேர்காணப்பட்ட பத்துப் பெண்களில், எட்டுப் பேர், மூன்று தசாப்தங்களாகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பிராந்தியமான கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள்.



‘தனியாக அலைந்து திரிய வேண்டாம் என என்னுடைய சகோதரர்கள் ஏற்கனவே எச்சரித்திருக்கின்றனர். அவர்களுக்கு இது குறித்து தெரியுமாயின், என்னுடைய சமூகப் பணிக்கு அது முடிவாக அமைந்துவிடும்’



- இவ்வெண்மரில், நால்வர் திருகோணமலை மாவட்டத்தையும், மூவர் மட்டக்களப்பு மாவட்டத்தையும், ஒருவர் அம்பாறை மாவட்டத்தையும் சேர்ந்தவர்களாவர்.

- ஒருவர் புத்தளம் மாவட்டத்தையும் (வடமேல் மாகாணம்), மற்றையவர் பொலன்னறுவை மாவட்டத்தையும் (வட மத்திய மாகாணம்) சேர்ந்தவர்களாவர்.

- மேலதிகமாக, முஸ்லிம் சமுதாயத்துடன் பணியாற்றும் செயற்பாட்டாளர்களுடன் ஐந்து மாவட்டம்சார் இலக்குக் குழுக் கலந்துரையாடல்களும் வவுனியா, புத்தளம், மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறையில் முன்னெடுக்கப்பட்டன. சட்டத்தரணிகள் மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களுடன் எட்டு நேருக்கு நேர் கூட்டங்களும் நடைபெற்றன.

- இலக்குக் குழுக் கலந்துரையாடல்கள் மற்றும் நேருக்கு நேர் கூட்டங்கள் நிறைவு பெற்றதும், இக்குழுக்களில் இருந்து ஒருவர் ஒவ்வொரு மாவட்டத்திலும் பிரதான ஆய்வாளராகச் செயற்படுவதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். இத்தனிநபர் அதன் பின்னர் ஆய்வு உதவியாளர்களாக இணைத்துக் கொள்ளப்பட்ட உள்ளூர்ச் செயற்பாட்டாளர்களுடன் (உளவளத் துணை அனுபவம் கொண்ட) தொடர்புபடுத்தி வைக்கப்பட்டனர்.

- பாதிக்கப்பட்ட பெண்களுடன் ஆரம்பக் கலந்துரையாடல்களை முன்னெடுப்பதற்கு மற்றும் கற்கையின் ஒரு அங்கமாக அவர்களது இணக்கத்தைப் பெறுவதற்கும் ஆய்வு உதவியாளர்களைப் பிரதான ஆய்வாளர் பயிற்றுவித்தார். நேருக்கு நேர் சந்திப்புக்கள் ஆரம்பிப்பதற்கு முன்னர் விளக்கமான வினாக்கொத்து ஒன்றினைப் பூர்த்தி செய்யுமாறு இப்பெண்களிடம் கோரப்பட்டது.

- நேர்காணல்கள் ஆரம்பித்தபோது, பாலியல் இலஞ்சத்திற்கான தமது சொந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுமாறு இப்பெண்களைக் கோருவது சிக்கலாக இருந்தது. இதனால், இப்பெண்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்கு, அவர்களுடன் ஏற்கனவே தொடர்பை ஏற்படுத்திக் கொண்டுள்ள அல்லது ஒவ்வொரு மாவட்டத்திலும், ஏதாவது ஒரு வகையில் இப்பெண்களுக்கு உதவிய, சமுதாய ஒருங்கிணைப்பாளர் அல்லது பெண்கள் உரிமைகள் செயற்பாட்டாளர் ஒருவருடன் இணைந்து ஆய்வாளர்கள் பணியாற்ற வேண்டியிருந்தது.

- நம்பிக்கையைப் பகிர்ந்து கொள்வதற்கு நேர்காணபவரைச் சந்திப்பதற்கு முன்னர் பல விஜயங்களைச் செய்ய வேண்டியிருந்தது. தமது அனுபவங்கள் குறித்துக் கதைப்பதற்கு இப்பெண்கள் தாமாகவே முன்வருவதற்கு

முன்னர், வடக்கிற் பெண்கள் தொடர்பில் ஏற்கனவே, ஆவணப்படுத்தப்பட்ட மற்றும் பரிந்துபேசல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் நீண்ட கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டன.

- சில சந்தர்ப்பங்களில், பல்வேறு ஆரம்ப உரையாடல்களின் பின்னரும் கூட, பாலியல் இலஞ்சம் தொடர்பான தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வது குறித்துப் பெண்கள் தயக்கமாக இருந்தனர். இறுதி அறிக்கையில் இந்நேர்காணல்களை இணைத்துக் கொள்ள முடியவில்லை.

'அவ்வப்போது அவருடைய தேவைகளை நான் பூர்த்தி செய்தால், என்னுடைய பிள்ளையின் அனைத்துச் செலவுகளையும் பார்த்துக் கொள்வதாகவும், பாடசாலையில் என்னுடைய பதவிநிலையை நிரந்தரமாக்குவதாகவும் கூறினார்.'



- மிக நெருக்கமான தகவல்களைப் பரிமாறக்கூடிய மிக உகந்ததல்லாத சூழல் ஒன்றில், ஏனைய குடும்ப உறுப்பினர்களின் முன்னிலையில் நேர்காணல்கள் பொதுவாக இடம்பெற்றன.

- தமது அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்த மற்றும் அவர்களிடம் இருந்து பாலியல் இலஞ்சங்கள் பெற்ற அரசாங்க அதிகாரிகளின் பெயர்களை ஆய்வாளர்கள் குறிப்பிட வேண்டும் என இரண்டு பெண்கள் குறிப்பிட்டனர். எவ்வாறாயினும், இவ்வாண்கள் கொண்டுள்ள அதிகாரத்தைக் கவனத்தில் கொண்டு, குற்றம் சுமத்தப்பட்டவர்களின் அருகாமையில் அவர்கள் உள்ளமை என்பவற்றைக் கவனத்திற் தெரிவித்து, அவர்களுடைய பெயரைத் தவிர்ப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

- குற்றமிழைத்தவருடன் நேர்காண்பவர்களை நேரடியாக இணைக்கும் தகவல்கள், அனைத்துப் பத்து சம்பவங்களிலும் தவிர்க்கப்பட்டுள்ளன.

- நேர்காணப்பட்ட சில பெண்களுக்கு, அதன் தொடர்ச்சியாக உளவளத்துணைச் சேவைகளும் வழங்கப்பட்டன.

## நேர்காணப்பட்டவர்களைக் கருத்தமைவாக்கல்

- நேர்காணப்பட்ட பெரும்பாலான பெண்கள் தனியாக வாழ்பவர்களாகவும், தம்மில் தங்கியுள்ள பிள்ளைகள் அல்லது வயதான பெற்றோரைக் கொண்டிருந்தனர்.

- நேர்காணப்பட்ட பத்துப் பெண்களில், ஆறு பேர் விவாகரத்துச் செய்தவர்களாக அல்லது தமது கணவரால் கைவிடப்பட்டவர்களாக உள்ளனர். ஒரு பெண்ணின் திருமண வாழ்க்கையானது ஒரு வாரத்திற்கும் நீடிக்கவில்லை. அதிகளவிலான குடும்ப வன்முறை, விவாகரத்து மற்றும் முஸ்லிம் சமுதாயத்திற்குள் கைவிடப்படல் என்பன முஸ்லிம் ஆண்களின் பலதாரமண உரிமை காரணமாக அதிகளவில் நடைப்பெறுகின்றது என்பதனை பெண்கள் சுட்டிக்காட்டினர்.

- மிக இளவயதிலேயே அவர்கள் திருணம் முடித்து வைக்கப்பட்டனர் அல்லது குடும்பத்தின் பிரதான வருமானம் ஈட்டுபவர் இறந்தமையால் இளவயதிலேயே வேலைக்குச் செல்ல நேர்ந்தமை காரணமாக இப்பெண்களில் பெரும்பான்மையானோர் மிக அடிப்படையான கல்வி மட்டத்தினையே கொண்டிருந்தனர்.

- திருமணமாகாத, ஒரு இளம் பெண் மாத்திரம் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றில் செயற்றிட்ட அதிகாரியாகப் பணியாற்றும் அதேவேளை, கல்வியையும் தொடர்ந்தார்.

> ‘தமது குடும்ப உறுப்பினர் அல்லாத ஒருவருடன் தாம் தனியாக இருந்தோம் என்பதனை அறிந்து கொண்டால், பள்ளியில் இருந்து ஒதுக்கி வைக்கப்படுவோம் எனவும் பெண்கள் அஞ்சினர்: எமது மதத்தைப் பொறுத்தவரையில், தனியாக இருப்பது எமக்கு எதிராகச் சென்றுவிடும்’.

ஆனாலும், அவரிடம் இருந்து பாலியல் இலஞ்சம் கோரப்பட்டபோது, அவருடைய குறிப்பிட்ட வாழ்க்கை இலக்குகளை அவர் கைவிட நேர்ந்தது.

- இப்பெண்களில் பெரும்பாலானோருக்கு நிலையான வாழ்வாதாரத்தைப் பெறக்கூடிய திறன்கள் ஏதும் இல்லை. இதனால், நிலையான வாழ்வாதாரத்தைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. தையல், சிற்றுண்டிகள் மற்றும் காலை உணவுகளைத் தயாரித்தல், முந்திரி சுத்தம் செய்தல், சுத்திகரிப்பாளராக வேலை செய்தல் என்பவற்றின் ஊடாக அவர்களுடைய வாழ்க்கை அமைந்துள்ளது. பெண் ஒருவர் வறுமை காரணமாகத் தமது பிள்ளைகளில் ஒன்றைத் தத்துக் கொடுக்கவும் நேர்ந்துள்ளது.
- இரண்டு பெண்கள் சமூகப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். அது அவர்களுக்குச் சமூக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளது.

‘நான் முறைப்பாடு செய்தால் அவர் கொன்று விடுவார் என ஒருபுறத்திலும், இன்றுவரை எந்த ஆண்களும் என்னைப் பற்றித் தவறாகப் பேச எதுவும் இல்லை என்பதால் இது அவர்களுக்கு வாய்ப்பாக அமைந்துவிடுமோ என மறுபுறத்திலும் நான் அச்சம் கொண்டேன்.’



- தம்மால் தனித்து நிலைத்திருக்க முடியாமையின் மற்றும் தமது பிள்ளைகளைத் தாமாகவே பார்த்துக் கொள்ள முடியாமையின் காரணமாக அல்லது தனியான பெண்ணாக இருப்பது இலகுவில் பாதிப்புக்கு உள்ளாக்கும் எனப் பெற்றோர்கள் கருதியமையால் பல பெண்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட தடவைகள் திருமணம் செய்துள்ளனர்.
- சில பெண்கள் தொடர்ந்தும் திருமண உறவில் துஷ்பிரயோகத்தினை அனுபவிக்கின்றனர் அல்லது அனுபவித்தனர்.
- பாலியல் இலஞ்சத்தின் அனுபவங்களைப் பெறும்போது அவர்களில் ஏழு பெண்கள் முப்பது வயதானவர்கள் அல்லது அதற்குக் குறைந்தவர்களாகவே இருந்துள்ளனர்.
- அவர்களது தனிமை மற்றும் இலகுவில் பாதிக்கப்படும் நிலையே தம்மைப் பாலியல் இலஞ்ச நிலைமைக்குத் தள்ளி விடுவதாகப் பெண்களில் ஐவர் குறிப்பிட்டனர்.

‘அவர் என்னிடம் நீண்ட நேரமாகக் கதைத்தார். நான் ஏன் தனியாக வாழுகின்றேன் எனக் கேட்டார். அவருடன் இரவில் உறங்க முடியுமா எனப் பகிரங்கமாகக் கேட்டார்.’

# முடிவுகளின் பகுப்பாய்வு

- ஆணாதிக்கம் மிக்க மற்றும் போதியளவில் பெண்களுக்கு கௌரவம், மதிப்பினை வழங்காத இலங்கைச் சமூகம் என்ற பரந்த அடிப்படையில் பாலியல் சுரண்டல் மற்றும் பாலியல் இலஞ்சம் என்பன புரிந்துகொள்ளப்படல் வேண்டும். உதாரணமாக, அனைத்து ஆண்களைக் கொண்ட முஸ்லிம் காதி நீதிமன்றத்தில், தமது கணவரினால் தாம் தொடர்ந்து உடல் ரீதியாக தாக்கப்படுகின்றோம் எனப் பெண் ஒருவர் முறைப்பாடு செய்யும்போது, வாழ்க்கையில் அவர் விட்டுக் கொடுத்துச் செல்லல் வேண்டும், இல்லையெனில் அவரது கணவர் வேறு திருமணம் செய்து கொள்வார் என்பதே அவர்களது பதிலாக இருந்தது.
- கணவரை இழந்த பெண்கள் மற்றும் தனியாக வாழும் பெண்கள் பாலியல் வேட்டையாடலில் இலகுவில் பாதிக்கப்படக் கூடியவர்கள், இணக்கமானவர்கள் மற்றும் தயாரானவர்கள் என்பது இலங்கைச் சமூகத்தில் அனைத்து நிலைகளிலும் இன்றும் பொதுவான ஒரு தோற்றப்பாடாக உள்ளது. அரச பிரதிநிதிகள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து பல்வேறு சேவைகளை வறிய நிலையிலுள்ள பெண்கள் அல்லது தனித்து வாழும் பெண்கள் போன்றோர் அணுகும் சக்தி சமத்துவமின்மை சூழ்நிலைகளில் அது மேலும் தீவிரமாகின்றது.

‘எனக்கு நெருக்கமாய் வந்த அவர், என் மீது அவரது உடலை உரசினார், எனக்கு உதவ விரும்புவதாகக் கூறினார்’

- பாலியல் இலஞ்சத்தின் பல்வேறு நிலைமைகளைச் சில பெண்கள் எதிர்கொண்ட அதேவேளை, மேலும் சிலர், திருமணம் செய்தல், மீண்டும் திருமணம் செய்தல் அல்லது வீட்டுப் பணிப்பெண்ணாக வேலை செய்வதற்கு வெளிநாடு செல்லுதல் போன்ற வழிகளின் மூலம் தப்பிப்பதற்கு முயற்சித்துள்ளனர். பாலியல் ரீதியாகச் சுரண்டல் மிக்க சூழ்நிலைகளின் அச்சுறுத்தல் நிறைவுபெற்றுள்ள அல்லது தவிர்க்கப்பட்டுள்ள நிலையில், பல வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் இப்பெண்களின் வாழ்க்கையில் தொடர்ந்தும் பாரியளவில் நீடிப்பதாக சில உள்ளன அல்லது குற்றமிழைத்தவர் இப்பெண்களுடன் வாழ்கின்றார் அல்லது அருகாமையில் வசிக்கின்றார்.

- தாம் எதிர்கொண்ட பாலியல் இலஞ்ச சம்பவம் குறித்து நண்பர் ஒருவருக்கு அல்லது உறவினர் ஒருவருக்குப் பெரும்பாலான பெண்கள் குறிப்பிட்டுள்ளனர். எவ்வாறாயினும், பெரும்பாலான பெண்களுக்கு இச்சம்பவம் குறித்துக் கதைத்த முதன்முறையான சந்தர்ப்பம் இதுவாகும். அதன் பின்னரும், தாம் எதிர்கொண்ட அழுத்தம் நிறைந்த மற்றும் சங்கடம் மிக்க நிலைமைகளின் அனைத்து விபரங்களையும் வெளிப்படுத்துவதற்குச் சங்கடமாக உணர்ந்தனர்.

> ‘அவர் என்னுடைய சமூகத்தைச் சேர்ந்தவர், நான் அணிந்திருக்கும் அபாயாவிற்கு அவர் மதிப்பளிப்பார் என நான் எண்ணினேன்’



- தம்மிடம் பாலியல் இலஞ்சத்தை எதிர்பார்த்தவர்கள் தமக்குத் தெரிந்த அல்லது தமது சொந்த சமூகத்தைச் சேர்ந்த, எடுத்துக்காட்டாக முஸ்லிம் ஆண்கள் போன்றவர்களால் முன்னெடுக்கப்பட்டமையினால் பெண்கள் அதிர்ச்சியும், வருத்தமும் அடைந்தனர். 'நான் அணியும் ஹபாயாவிற்கு அவர் மதிப்பளிப்பார் என எண்ணினேன்' எனப் பெண் ஒருவர் குறிப்பிட்டார்.

- நேர்காணப்பட்டவர்களால் குறிப்பிடப்பட்ட பத்துப் பாலியல் இலஞ்ச சம்பவங்களில், மூன்று பெண்கள் மாத்திரமே முறைப்பாடு செய்துள்ளனர். ஒருவர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடமும், பொலிஸ் நிலையத்தில் உள்ள மகளிர் பிரிவிடமும் முறைப்பாடு செய்துள்ளார். மற்றொருவர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடமும், பெண்கள் குழு ஒன்றிடமும், மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமும், மூன்றாமவர் அரச சார்பற்ற நிறுவனத்தின் சர்வதேச நன்கொடையாளர் ஒருவரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

- இம்முறைப்பாடுகள் எதுவும் மிக முக்கியமானதாக எடுத்துக் கொள்ளப்படவுமில்லை அல்லது தண்டிக்கப்படவும் இல்லை. மாறாக, பெண்களுக்கு மேலதிக ஏமாற்றத்திற்கே வழி வகுத்தது.

- பாலியற் சுரண்டல் மற்றும் பாலியல் இலஞ்ச நிகழ்வுகள் பெண்கள் மீது பெரும் உளவியற் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. சம்பவத்தின் போதும், அதன் பின்னரும் வெறுப்பு, அவமானம், துன்பம், கோபம் மற்றும் ஏமாற்றம் போன்ற உணர்வுகளை அனுபவித்ததாக நேர்காணப்பட்டவர்கள் குறிப்பிட்டனர்.

- சம்பவம் நிகழ்ந்தவுடனேயே ஒரு பெண் வாந்தியெடுத்தார், அதேவேளை மற்றொருவர் பலவீனமாகவும், சடமாகவும் உணர்ந்தார். மற்றொருவரோ பாலியல் குற்றம் புரிந்தவரால் மீண்டும் மீண்டும் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாவதைப் போல் பயங்கரக் கனவுகளை கண்டுள்ளார். இன்னொருவர் ஒரு வருடமாக வீட்டை விட்டு வெளியேறவில்லை. அத்துடன், உண்பதற்கு சிரமத்தையும் எதிர்கொண்டுள்ளார். இன்னொரு பெண், 'புற்றுநோயை விட மோசமான காயம்' எனத் தமது அனுபவத்தினை இல்லாது செய்ய முடியாது என விளக்கினார்.

- பெற்றோர்கள், நண்பர்கள் மற்றும் சில சந்தர்ப்பங்களில், வெறும் அறிமுகமானவர்கள் எனப் பாலியல் இலஞ்சக் கோரலைத் தவிர்ப்பதற்கு இப்பெண்களுக்கு ஆதரவளிப்பதில் மிகவும் முக்கியமான பங்கினை ஆற்றினர். கருணையுடன் அவர்களுக்குச் செவிகொடுத்து, ஆலோசனை மற்றும் ஊக்கத்தை அவர்கள் வழங்கினர். அத்துடன், பாலியல் வேட்டையாடியவரின் சக்தியை மீறுவதற்கும் அவர்கள் உதவினர்.

- எவ்வாறாயினும், குற்றமிழைத்தவருக்கு ஊக்கமளித்ததாகக் கருதியதாற் தமது கணவர் தம்மைக் கடுமையாக அடித்ததாகப் பெண் ஒருவர் கூறினார்.

- சில பெண்கள் தமது உள்ளுணர்வை வெளிப்படுத்தி, பாலியற் குற்றமிழைத்தலுக்கு எதிரான பிரச்சினையையும் தீர்த்தனர். இரண்டு பெண்கள் உளவளத்துணையை நாடினர். அதேவேளை தாம் பிரச்சினையில் இருந்து வெளிவந்துவிட்டதாகவும், குற்றமிழைத்தவரை அல்லாஹ் தண்டிப்பார் எனவும் மற்றவர் குறிப்பிட்டார்.

> 'அவர் முகத்தில் காரி உமிழ்ந்துவிட்டு, அடித்திருக்கலாம். ஆனால், அவர் எமது சமூகத்தையே சார்ந்த ஒரு பொலிஸ் அதிகாரி'

# குற்றமிழைத்தவர்கள் / குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்

- பாலியல் குற்றம் புரிந்தவர்கள் அனைவருமே அரசின் பிரதிநிதிகளாகும்:
  - பொலிஸ் அதிகாரிகள் (3 சம்பவங்கள்)
  - மாவட்டச் செயலாளர் (1 சம்பவம்)
  - மாகாண சபை உறுப்பினர் (1 சம்பவம்)
  - மாகாண சபை உறுப்பினரின் செயலாளர் (1 சம்பவம்)
  - நன்னடத்தை அதிகாரி (1 சம்பவம்)
  - கிராம சேவகர் (1 சம்பவம்)
  - அரசாங்கப் பாடசாலையின் நிர்வாகி (1 சம்பவம்)
  - கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் (1 சம்பவம்)

- இச்சம்பவக் கற்கைகளில் குறிப்பிடப்பட்ட பல்வேறு அதிகாரிகள் ஏற்கனவே பாலியல் குற்றமிழைத்தமைக்குப் பிரபலமானவர்கள். குறிப்பிட்ட ஒரு பொலிஸ் நிலையத்திற்கு விஜயம் செய்தபோது தாம் பாலியல் இலஞ்சத்தை எதிர்கொண்டதாக நேர்காணப்பட்டவர்கள் இருவர் கூறினர்.

- சில அரசாங்க அதிகாரிகளுக்கு எதிராக உத்தியோகபூர்வ முறைப்பாடுகள் செய்யப்பட்ட போதிலும், பாலியல் குற்றவாளிகள் என்ற பெயர் ஏனையோருக்கு இருந்தபோதிலும், இவை எதுவும் அவர்கள் பாலியல் இலஞ்சத்தை கோராமலிருப்பதற்குத் தடையாக அமையவில்லை.

- பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக முறைப்பாடுகள் செய்யப்பட்ட போதிலும், அவர்களது சக ஊழியர்கள் அவற்றைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. முறைப்பாட்டினைப் பதிவு செய்வதற்கு ஒரு அதிகாரி மறுப்புத் தெரிவித்தார். அத்துடன், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை பாதிக்கப்பட்ட பெண் சந்திப்பதனையும் அவர் தடுத்தார். மற்றொரு சந்தர்ப்பத்தில், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாடு செய்தவரை அவர் திட்டினார். இப்பெண்ணைப் போன்றவர்களுக்கு நேரம் விரயம் செய்யத் தாம் தயாரில்லை என அவர் கூறினார். ஏமாற்றமளிக்கும் வகையில், முறைப்பாடு செய்வதற்கு அறிமுகமான பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவின் பெண் பொலிஸ் அதிகாரி ஒருவரிடம் முறைப்பாடு செய்தபோதிலும், அது பெரிதாக எடுத்துக் கொள்ளப்படவில்லை. ‘அதிகம் போராடுவதாகவும், இவ்வாறான கதைகளை உருவாக்குவதாகவும்’ அப்பெண்ணிடம் பொலிஸ் பெண் அதிகாரி கூறியுள்ளார். மனித உரிமைகள் ஆணைக்குழு கூட எவ்வித பதிலையும் அளிக்கவில்லை.

# பாலியற் சுரண்டல் மற்றும் பாலியல் இலஞ்சத்திற்கு வழிகோலிய சூழ்நிலைகள்

பாலியற் குற்றம் புரிதலுக்கு பெண்களைத் தள்ளிவிடும், அவர்களின் வாழ்க்கையின் பரந்தளவு அடிப்படையிற் பாலியற் சுரண்டல் மற்றும் பாலியல் இலஞ்ச நிகழ்வுகள் புரிந்துகொள்ளப்படல் வேண்டும்.

- உதாரணமாக, தம்மைப் பொருளாதார ரீதியாக மேம்படுத்திக் கொள்வதற்குப் பெண்கள் உதவிகளை நாடும்போது, ஓய்வூதியம் வழங்கும் அரசாங்க வேலைவாய்ப்பினை நாடும்போது அல்லது வீட்டுப் பணிப்பெண்ணாக மத்திய கிழக்கிற்குப் புலம்பெயர முயற்சிக்கும்போது பாலியல் இலஞ்சத்திற்கு முகம் கொடுத்தல்,

- காணிப் பிரச்சினை, சிறுவர் பராமரிப்புக்குக் கொடுப்பனவு வழங்காமை மற்றும் மரணச் சான்றிதழ் வழங்காமை என்பவற்றில் சட்ட ஒழுங்கைக் காக்கும், நீதிக்கான முதன்மை இடமான பொலிஸாரின் சேவைகளைப் பெண்கள் நாடியபோது பாலியல் இலஞ்சத்தின் மூன்று சம்பவங்கள் இடம்பெற்றன.

- சமூக சேவையில் ஈடுபட்டிருந்தபோது பெண்களுக்கு இரண்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. வறுமையில் உள்ள பெண் ஒருவருக்குக் கழிவறை ஒன்றினை அமைத்துக் கொடுக்க ஒரு பெண் முயற்சித்தார். அதேவேளை, மற்றைய பெண் உள்ளூர்ப் பாடசாலையை மேம்படுத்த விரும்பினார்.

- புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட தமது இளைய மகளிற்கு மருத்துவ உதவியைப் பெண் ஒருவர் நாடியபோது ஒரு சம்பவம் இடம்பெற்றது.

## பாலியற் சுரண்டல் மற்றும் பாலியல் இலஞ்சத்தின் வகைகள்

- இரவிற் பெண்ணின் வீட்டிற்கு விஜயம் செய்து, பாலியல் விருப்பினைக் கோரல்.

- பல்வேறு காரணங்களைக் கூறிக்கொண்டு பகல் பொழுதில் பெண்ணின் வீட்டிற்கு விஜயம் செய்து, அவரைத் தொடுவதற்கு மற்றும் இழுப்பதற்கு முயற்சித்தல்.

- பாலியற் தொந்தரவு மற்றும் பொருத்தமற்ற நடத்தை.

- பாலியல் உறவுக்கான அதிகாரபூர்வமான உத்தரவு.

- குற்றமிழைத்தவருடன் வாழ்வதற்குப் பெண்ணைக் கோரல்.

- மாலையில் நேரம் கடந்தும் பெண்களை அலுவலகத்தில் இருக்கச் செய்தல் அல்லது வேலை நேரத்திற்குப் பின்னர் அலுவலகத்திற்கு விஜயம் செய்யுமாறு கோரல்.

- குறிப்புணர்த்தும் கருத்துக்கள், பாலியல் அவமதிப்பு மற்றும் துஷ்பிரயோகமான, அவமதிக்கும் மொழிக்கு ஆளாதல், மோசமான நகைச்சுவைகளுக்கு ஆளாதல்.

- அவர் முறைப்பாடு தெரிவித்தால் அல்லது யாரிடமாவது தெரிவித்தால் ஆபத்தை எதிர்கொள்ள நேரிடும் என வாய்மூல அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளல்.

- தமது கூற்றிற்கு செவிமடுக்காமையால், பிள்ளையைத் தூக்கிக்கொண்டு வெளியேறுமாறு தண்டித்தல்.

பாலியல் இலஞ்சத்தின் எக்கோரிக்கைக்கும் தாம் உண்மையில் உள்ளாகவில்லை எனவும், சம்பவ இடத்தில் இருந்து உடனடியாகத் தப்பிக்கக் கூடியதாக இருந்ததாகவும், எந்தவொரு பெண்ணும் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதே மிகவும் முக்கியமானது. எவ்வாறாயினும், தமது ‘அந்தரங்க அங்கங்கள்’ தொடப்பட்டதாகவும், பாலியல் தொந்தரவு குறித்து மேலதிக தகவல்கள் எதனையும் வழங்க முடியாது எனவும் குறிப்பிட்டனர்.

> ‘இரவில் நான் திடீரென எழுந்து கொள்வேன். அவர் என்னை வல்லுறவு செய்வதைப் போல் அடிக்கடி பயங்கரக் கனவு காண்பேன்’

பாலியற் குற்றத்தைத் தடுத்த பெரும்பாலான நேர்காணப்பட்டவர்கள், அபாயகரமான சூழ்நிலை ஒன்றினை நிறுத்துவதற்கு அல்லது தவிர்ப்பதற்கு அணிதிரண்டு முன்னெடுத்த பல்வேறு பயனுள்ள உத்திகளைக் குறிப்பிட்டனர். அத்தகைய உத்திகள் பரந்தளவில் வளர்ந்ததுடன், ஏனையோரை விட சிலர் வெற்றிகரமானவர்களாகவும் திகழ்ந்தனர்.

- தாம் நாடிய சேவை அல்லது ஆவணப்படுத்தலைத் தவிர்த்தல்.
- வருகைப் பதிவேட்டின் மூலம் குற்றமிழைத்தவரை அடித்தல்.
- குற்றமிழைத்தவரைத் தள்ளிவிட்டு, வெளியே ஓடல்.
- குற்றமிழைத்தவரைத் திட்டுதல், கத்துதல் மற்றும் பொருட்களை எடுத்து வீசுதல்.
- முச்சக்கர வண்டியைக் காத்திருக்கச் செய்தல். அதன் மூலம் விரைவாக வெளியேறல்.
- அயலில் உள்ளவர்களின் வீட்டிற்குத் தப்பிச் செல்லல்.
- தமது உயர் அதிகாரிக்கும், மகளிர் பிரிவுக்கும், பெண்கள் குழுக்களுக்கும், மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும் முறைப்பாடு செய்தல்.
- தவிர்த்தல்.
- நண்பர் ஒருவரின் உதவியை நாடல்.
- நண்பரின் தாயிடமிருந்து உதவி நாடல்.
- ஏனைய அரசாங்க அதிகாரிகளிடமிருந்து உதவியைப் பெறல்.
- பெண் பொலிஸ் அதிகாரி ஒருவரிடமிருந்து உதவியைப் பெறல்.

# நிவாரணம் அல்லது இழப்பீட்டை நாடுவதற்குப் பெண்கள் தவறுவது ஏன்?

- பெண்கள் முறைப்பாடு செய்யாமைக்கான இரண்டு பிரதான காரணங்களாவன:
  - சமூக களங்கம் மற்றும் முஸ்லீம் சமூகத்திற்குள் கௌரவம் மற்றும் மதிப்பினை இழந்துவிடும் அச்சம். தாமே குற்றம் செய்தவராகக் கருதப்படுவோம் என அனைத்துப் பெண்களும் கூறினர்.

    தமது உடனடிக் குடும்ப உறுப்பினர் அல்லாத ஒருவருடன் தாம் தனியாக இருந்தோம் என்பதனை அறிந்து கொண்டால், பள்ளியில் இருந்து ஒதுக்கி வைக்கப்படுவோம் எனவும் பெண்கள் அஞ்சினர்: ‘எமது மதத்தைப் பொறுத்தவரையில், தனியாக இருப்பது எமக்கு எதிராகச் சென்றுவிடும்’.

    தமக்கு என்ன நடந்தது என்பதனைத் தமது சகோதரர்கள் அறிந்து கொண்டால், தாம் தனியாகப் பயணிப்பதனைத் தடுத்து விடுவார்கள் எனவும், தம்மால் தமது சமூக சேவையைத் தொடர முடியாது என அஞ்சியதாகவும் பெண் ஒருவர் குறிப்பிட்டார்.
  - குற்றமிழைத்தவர் பெண்களை விடச் சக்தி மிக்கவர் என்பதால், பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் அவரின் பதிலிடையான நடவடிக்கைகள் மீதான அச்சம். குற்றமிழைத்தவர் பணி புரிந்த நிறுவனத்தின் பெயரைக் குறிப்பிடுவதற்கும் பெரும்பாலான பெண்கள் அஞ்சினர். எவ்வாறாயினும், தண்டிக்காவிட்டால், குற்றமிழைத்தவர் தொடர்ந்தும் ஏனைய பெண்களிடம் பாலியல் இலஞ்சம் கோருவார் என்பது தொடர்பிலும் அவர்கள் கரிசனை கொண்டிருந்தனர்.

- பின்வரும் காரணங்களால் தாம் நம்பப்படமாட்டோம் எனப் பெண்கள் கருதினர்:
  - அவர் வறியவர் மற்றும் அதிகாரமற்றவர்.
  - பாலியல் ரீதியாகப் பலவீனமானவராகவும், ஒழுக்கமற்றவராகவும் அவர் கருதப்படலாம்.
  - சக்தி மிக்க அரசியல்வாதி ஒருவரால் அவர் அழைக்கப்பட்டுள்ளார்.
  - நன்கு மதிக்கப்பட்ட, தமது அறக்கட்டளைச் செயற்பாடுகளால் பிரபலமான ஒருவரால் அவர் அழைக்கப்பட்டுள்ளார்.
  - சாட்சியங்கள் எதுவும் இல்லை.
  - ஆர்வமின்றி அல்லது பரிகாசத்துடன் முறைப்பாடுகளைக் கையாளல்.

- தமது முறைப்பாட்டினைப் பெறும்நபர் தம்மைப் பாலியல் ரீதியாகத் தொந்தரவு செய்யலாம் எனவும் பல பெண்கள் அச்சம் கொண்டிருந்தனர்.

- சட்ட அமுலாக்கல் அதிகாரிகளே மிகவும் மோசமான பாலியற் குற்றமிழைப்பவர்கள் என்ற பொதுவான எண்ணம் பெண்கள் மத்தியில் உள்ளது (ஏனைய அதிகாரிகள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் இப்பெண்களைக் கையாளும் பெண் பொலிஸ் அதிகாரிகள் எவ்வாறு நடந்து கொண்டனர் என்பதற்கும் மேற்குறிப்பிட்ட குறிப்புதவிகளைப் பார்க்க).

> ‘என்னைப் போன்ற இளம் முஸ்லிம் பெண் நீதிமன்றத்திற்குச் செல்ல முடியாது ...’

- அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் உரிமைகள்சார் செயற்பாடு குறித்து அரிதாகவே அவர்கள் அறிந்து வைத்துள்ளதுடன், உதவிக்காகவும், நிவாரணத்திற்காகவும், தாம் முறைப்பாடு செய்யக்கூடிய சட்ட நிறுவனங்கள் அல்லது சுயாதீன, அரச சார்பற்ற அதிகாரிகளையும் எவ்வாறு அணுகுவது என்பது தொடர்பாகவும் குறைந்தளவு அறிவினையே கொண்டுள்ளனர்.

- பொலிஸ் அதிகாரிகளால் பாலியல் இலஞ்சம் கோரப்பட்ட இரண்டு பெண்கள், மனித உரிமைகள் ஆணைக்குழு குறித்து அறிந்து வைத்திருந்தனர். அத்துடன், அவர்களில் ஒருவர் ஆணைக்குழுவில் முறைப்பாடும் செய்துள்ளார். ஆனால், இதுவரை எதுவும் நடக்கவில்லை. தாம் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்குச் சென்றால், குற்றத்தை முன்னெடுத்த அதே பொலிஸ் அதிகாரிகளைப் பயன்படுத்தியே அவர்கள் விசாரணை செய்வார்கள் எனவும், அதனால் அச்செயற்பாடு தொடர்பில் தமக்கு நம்பிக்கை இல்லை எனவும் மற்றைய பெண் குறிப்பிட்டார்.

- குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்படல் வேண்டும் என்பதில் பெரும்பாலான பெண்கள் உறுதியாக இருந்தனர். ஆனாலும், தற்போதைய சட்ட முறைமையின் ஊடாக அது நடைபெறுவதனை அவர்கள் காணவில்லை. அது பாலியல் இலஞ்சத்தை அங்கீகரிக்கவே இல்லை என அவர்கள் கருதினர். அல்லாஹ்வினை நம்புதல் மூலம் நீதியை மிஞ்சிய சக்தி பார்த்துக் கொள்ளும் எனவும் அல்லது சவூதி அரேபியாவைப் போன்று குற்றமிழைத்தவர்களை உயிரிழக்கும் வரை கற்களால் அடித்துக் கொல்லுதல் போன்ற பொதுத் தண்டனையின் சாத்தியம் குறித்தும் அவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

# பரிந்துரைகள்

- பதவி உயர்வுக்குத் தகுதியான அரசாங்க அதிகாரிகளுக்கான ஆராய்ந்து முடிவு செய்யும் (vetting system) முறை ஒன்று இருத்தல் வேண்டும். அத்தகைய அதிகாரிகளுக்கு எதிரான பாலியல் இலஞ்சம் மற்றும் பாலியற் சுரண்டல் சார்ந்த முறைப்பாடுகளின் மீளாய்வு செய்தலையும் அம்முறைமை உள்ளடக்கியிருக்க வேண்டும். கறையற்ற குணம் மற்றும் சேவையைக் கொண்டுள்ள அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு வழங்கப்படல் வேண்டும். அதேவேளை, பாலியல் இலஞ்சம் கோரியதாகக் குற்றஞ் சுமத்தப்பட்டவர்கள் உடனடியாகப் பதவி நீக்கப்படல் வேண்டும்.

- இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அல்லது மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்குள் பக்கச்சார்பின்மை மற்றும் பால்நிலைக் கூருணர்வு தொடர்பில் நிரூபிக்கப்பட்ட அனுபவங்களைக் கொண்ட நம்பகமான அதிகாரிகள் பாலியல் இலஞ்ச முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக நியமிக்கப்படல் வேண்டும். அக்கட்டமைப்பானது இலகுவில் அணுகப்படக் கூடியதாக, பதிலளிப்பதாகவும், மிகவும் முக்கியமாகப் பெண்களைக் கண்ணியத்துடனும், ஒழுங்குசார் தீர்மானம் எடுத்தல் அற்றதாகவும், நடத்துவதாக இருத்தல் வேண்டும். பாதிக்கப்பட்டவர்களின் அடையாளத்தைப் பாதுகாப்பதற்கான பொறியமைப்பு ஒன்றும் அமைக்கப்படல் வேண்டும்.

- கல்வி மற்றும் பாலியற் சுரண்டல் மற்றும் பாலியல் இலஞ்ச விடயங்களைச் சூழவுள்ள பக்கச்சார்பினை எதிர்த்துப் போராடுவதற்குப் பாரியளவு விழிப்புணர்வுப் பிரசாரங்களின் ஊடாக சமூக உளப்பாங்குகளில் அரசாங்கமானது மாற்றத்தை முன்னிறுத்தல் வேண்டும்.

- பாலியல் இலஞ்சத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் அணுகக் கூடிய அல்லது குறிப்புதவி செய்யக் கூடிய வினைத்திறன் மிக்க நிவாரணக் கட்டமைப்பு ஒன்றினை அரசாங்கம் கட்டியெழுப்பல் வேண்டும்.

- பாலியல் இலஞ்சம் சம்பந்தப்பட்ட சட்டங்கள் மற்றும் நிவாரணக் கட்டமைப்புக்கள் தொடர்பில் அரசாங்க அதிகாரிகள் கற்பிக்கப்படல் வேண்டும்.

- பெண்களைச் சமமாக நடத்துவதற்குப் பொலிஸ் அதிகாரிகளுக்குப் பயிற்சியளிக்கப்படல் வேண்டும்.

- பாலியல் இலஞ்சத்திற்குக் கடுமையான தண்டனை அளிப்பதனை உள்ளடக்கியதாகக் குற்றவியற் கோவை திருத்தப்படல் வேண்டும். மேலும், பாலியல் இலஞ்சத்திற்கு எதிராகக் கடுமையான சட்டங்கள் (உ-ம்: பாலியல் வல்லுறவு அல்லது அதற்கு இணையான வல்லுறவிற்குக் கடுமையான தண்டனை) இருத்தல் வேண்டும்.

- குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக உறுதியான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். ஏனைய குற்றமிழைத்தவர்களுக்குத் தடையாகச் செயற்படக்கூடிய வகையில் அத்தகைய பொறியமைப்புக்கள் பகிரங்கப்படுத்தப்படல் வேண்டும்.

- பாலியல் இலஞ்சத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கமானது சட்ட உதவி வழங்கல் வேண்டும். இதன்மூலம், முறைப்பாடுகள் அல்லது சட்ட சம்பவங்களை அவர்கள் முன்னெடுக்க முடியும்.

- தமது அனுபவங்களைப் பகிரங்கமாகப் பகிர்வதற்குத் தீர்மானிக்கும்போது பாதிக்கப்பட்டவர்களுக்குச் சமூகக் களங்கத்தை எதிர்கொள்வதற்கான உளவளத் துணைச் சேவைகளை அரசாங்கம் வழங்குதல் வேண்டும்.

- தமது ஆணைக்குட் பாலியல் இலஞ்சத்தினைப் பொதுச் சேவைகள் ஆணைக்குழு உள்ளடக்கல் வேண்டும்.

- அதியுயர் இரகசியத் தன்மையை உறுதி செய்யும் அதேவேளை, பாலியல் இலஞ்ச முறைப்பாடுகளைக் கையாள்வதற்குச் சுயாதீன ஆணைக்குழுக்கள் ஸ்தாபிக்கப்படல் வேண்டும்.

- பாலியல் இலஞ்ச சம்பவங்களை அறிக்கைப்படுத்துவதற்கு இணையத்தளம் ஒன்று உருவாக்கப்படல் வேண்டும்.

- பாலியல் இலஞ்சத்தைக் கையாள்வதில் முன்னிலை வகிப்பதற்கு டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன், அறிக்கைகள் பதிவு செய்யப்படும்போது சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களுக்கு குறிப்புதவி வழங்கப்படல் வேண்டும்.

- இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வடிவமைக்கப்பட்ட அரச துறை நிறுவனங்களில் பாலியற் பலாத்காரத்தை அடையாளப்படுத்துவதற்கான வழிகாட்டிகள், பாலியல் இலஞ்ச முறைப்பாடுகளைக் கையாள்வதற்குத் திருத்தப்படல் வேண்டும். அவற்றைக் கையாள்வதற்கான விசேட முறைப்பாட்டு நடைமுறை ஒன்றினையும் மனித உரிமைகள் ஆணைக்குழு உருவாக்க வேண்டும்.

- யுத்தத்திற்குப் பின்னரான அனைத்து சேவை விநியோகக் கட்டமைப்புக்களிலும், உத்தேசிக்கப்பட்ட நிலைமாற்று கால நீதிப் பொறியமைப்புக்களிலும் ஐம்பது வீதம் அல்லது அதற்கு மேற்பட்ட பெண் பிரதிநிதித்துவம் (அனைத்து மட்டங்களிலும், மேலிருந்து கீழாக) உறுதி செய்யப்படல் வேண்டும்.

- பொலிஸ் ஆணைக்குழு, தேர்தல்கள் ஆணைக்குழு, இலஞ்ச ஊழல் ஆணைக்குழு மற்றும் பொது சேவைகள் ஆணைக்குழு போன்ற தற்போதுள்ள சுயாதீன ஆணைக்-குழுக்களில் பாலியல் இலஞ்ச விசாரணை ஆணை உள்ளடக்கப்படல் வேண்டும். இவ்வாணைக்குழுக்கள் ஒவ்வொன்றும் பாலியல் இலஞ்ச வழக்குகளை விசாரிப்பதற்கான மற்றும் கையாள்வதற்கான பால்நிலைக் கூருணர்வு மிக்க மற்றும் நம்பகமான நடைமுறைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

- பொதுச் சேவைகள் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் கிடைக்கக் கூடியதாகவுள்ள நிவாரணப் பொறியமைப்புக்கள் தொடர்பில் பரந்தளவு பொது விழிப்புணர்வுப் பிரசாரம் முன்னெடுக்கப்படல் வேண்டும். இதன் மூலம், தமக்காக இவ்வகையான பொறியமைப்புக்கள் மற்றும் நடைமுறைகள் உள்ளன என்பதனை பெண்கள் அறிந்து கொள்ள முடியும்.

- பாலியல் இலஞ்சம் மற்றும் பாலியற் பலாத்காரம் சம்பந்தப்பட்ட சகிப்புத் தன்மை-யற்ற கொள்கையைத் தத்தெடுப்பதற்குப் பொதுநிர்வாக/ சேவைத் திணைக்களத்தின் அனைத்துத் தலைவர்களுக்கும் அரசாங்கம் சுற்று நிரூபத்தை அனுப்பி வைக்க வேண்டும். அத்தகைய வழக்குகளைக் கையாள்வதற்கு அமைக்கப்பட்ட திறன் மிக்க குழுவினால் அத்தகைய மீறல்கள் நன்கு விசாரணைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

- அத்தகைய முறைப்பாடுகளைக் கையாள்வ-தற்கும், பாலியல் இலஞ்சத்தைத் தடுப்பதற்கும் உள்ளகப் பொறியமைப்புக்கள் மற்றும் வழிகாட்டிகளை அரச சேவைகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் கொண்டிருத்தல் வேண்டும். போதியளவு விழிப்புணர்வு ஏற்படுத்தல் மற்றும் ஆதரவான சூழல் என்பன இணைந்ததாக அத்தகைய முயற்சிகள் அமைதல் வேண்டும். அதன், பெண்கள் முறைப்பாடு செய்வதற்கும், நிவாரணம் பெறுவதற்கும் ஊக்கமளிக்க முடியும்.

- பகிடிவதையை மாத்திரமன்றி, பாலியல் இலஞ்சம் மற்றும் பாலியற் சுரண்டல் சார்ந்த வழிகாட்டிகளை உள்ளடக்கும் வகையில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட சுற்றுநிரூபம் இல. 919, திருத்தப்படல் வேண்டும்.

- கிராம சேவகர், நன்னடத்தை அதிகாரிகள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பொது சுகாதார உத்தியோகத்தர்கள் போன்ற பெண்களுடன் நேரடியாகச் செயற்படும் அரசாங்க அதிகாரிகளுக்காகப் பாலியல் இலஞ்சம் தொடர்பிலும் குறிப்பிடும் ஒழுக்கக் கோவை ஒன்று அமைக்கப்படல் வேண்டும்.

- பாலியல் இலஞ்சம், சுரண்டல் மற்றும் பலாத்கார சம்பவங்கள் தொடர்பான பதிவுகள் மற்றும் தரவுத்தளங்களை அனைத்து அரசாங்க திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களும் பேணுதல் கட்டாயமாக்கப்படல் வேண்டும்.

- பாலியல் இலஞ்சத்திற்கு எதிரான சட்டங்கள் மற்றும் பிரயோகிக்கக் கூடிய தண்டனைகள் பொலிஸ் நிலையங்கள், பல்கலைக்கழகங்களில், முக்கியமான இடங்களில், பொது இடங்களில், பொதுப் போக்குவரத்தில் மற்றும் அனைத்து அரசாங்க நிறுவனங்களிலும் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

- தற்போதுள்ள முறைப்பாட்டுப் பொறியமைப்புகளில் பாலியல் இலஞ்சம் பற்றிய வழக்குகளை அறிக்கைப்படுத்துவதற்கும், அடிமட்டத்தில் மக்களுக்கு அறிவூட்டுவதற்கும், இது தொடர்பில் புதிய சட்டம்/நிர்வாக சுற்றுநிரூபம் அல்லது பொறியமைப்பு அறிமுகப்படுத்தும்போது மக்களை எச்சரிப்பதற்குப் பொது விழிப்புணர்வுப் பிரசாரம் ஒன்றினை அரசாங்கம் ஆரம்பிக்க வேண்டும்.

- அனைத்து மூன்று மொழிகளிலும், மிகவும் முக்கியமாகச் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில், அனைத்துச் சுற்றுநிரூபங்களும், விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் அமைதல் வேண்டும். பாலியல் இலஞ்சத்தினைக் கையாள்வதற்கான விசாரணைகள் மற்றும் முறைப்பாட்டுப் பொறியமைப்புக்கள் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் திறன் வாய்ந்த நபர்களை ஊழியர்களாகக் கொண்டிருக்க வேண்டும். மனித உரிமைகள் ஆணைக்குழு, பொதுச் சேவைகள் ஆணைக்குழு மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு போன்ற நிறுவனங்களில் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் தேர்ச்சி மிக்கவர்கள் நியமிக்கப்படல் வேண்டும்.

- பாலியற் சுரண்டல் மற்றும் பாலியல் இலஞ்சத்தினைக் கையாள்வதற்கான மையப் புள்ளிகளாகப் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இருத்தல் வேண்டும். உளச் சமூக உதவிக்கான குறிப்புதவிகளை வழங்குவதற்கான அறிவு மற்றும் வசதிகளை அவர்கள் கொண்டிருக்க வேண்டும். மேலதிகமாக, உயர் மட்ட முறைப்பாட்டினைக் கையாளும் பொறியமைப்புக்களுக்குத் துஷ்பிரயோகத்தின் தன்மையை நேரடியாக அறிவிப்பதற்கான அதிகார சபையை அவர்கள் கொண்டிருக்க வேண்டும்.

- பாலியற் சுரண்டல் மற்றும் பாலியல் இலஞ்சம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை எதிர்கொள்ளும் பெண்கள் அணுகக் கூடிய சேவைகள் தொடர்பில் மதத் தலைவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படல் வேண்டும். அத்துடன், பரந்த சமுதாயத்துடன் தகவலைப் பரிமாறுவதற்கு ஊக்கமளிக்கப்படல் வேண்டும்.

- இச்சேவைகளை எவ்வாறு அணுகுவர் என்பது பற்றிய விழிப்புணர்வுடன், பாலியற் சுரண்டலை மற்றும் இலஞ்சத்தை அனுபவித்தவர்களுக்கு உளச் சமூக உதவி பாரியளவில் கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம்
325 ஏ1, திம்பிரிகஸ்யாய வீதி கொழும்பு 05. இலங்கை.
தொலைபேசி/ தொலைநகல்: 94 11 2055404